සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

ආර්ථික විද්‍යාව I
பொருளியல் I
Economics I

21 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** பின்வரும் தலைப்புகளில் ஒரு சிற்றினப் பொருளாதாரத் தலைப்பாக அமைவது
(1) புகையிரத போக்குவரத்துச் சேவை மீதான அரசாங்க ஒழுங்கு விதியின் தாக்கம்.
(2) பொது விலை மட்டத்தில் ஏற்படும் அதிகூடிய அதிகரிப்புக்கான காரணங்கள்.
(3) ஒரு நிலைபேறான பொருளாதார வளர்ச்சியை அடைவதிலுள்ள தடைகள்.
(4) பணவீக்கம் மீதான அரசாங்க வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையின் தாக்கம்.
(5) தேசிய வருமான மட்ட சமநிலையின் நிர்ணயம்.

**2.** பின்வருவனவற்றுள் எல்லையற்ற மனித விருப்பங்களுடன் ஒப்பிடுகையில் வளங்களின் அருமைத் தன்மையால் ஏற்படும் விளைவு எது?
(1) சந்தையில் பொருட்கள் சேவைகளுக்கான மிகை நிரம்பல் காணப்படவில்லை.
(2) சந்தைகள் வளங்களை வினைத்திறனாக ஒதுக்கமுடியாமல் உள்ளன.
(3) அனைத்துப் பொருட்களும் சேவைகளும் ஒரு சந்தை விலையைக் கொண்டுள்ளன.
(4) உற்பத்திக் காரணிகளை உற்பத்திக்குப் பயன்படுத்துவதில் ஒரு அமையச் செலவு காணப்படுகின்றது.
(5) சில வளங்களின் கிடைக்கத்தக்கதாக உள்ள அளவு அவற்றின் கேள்வியை விடவும் கூடுதலாக உள்ளது.

**3.** ஒரு நாடு தேயிலையையும் டயர்களையும் உற்பத்தி செய்வதாகக் கருதுக. வளங்கள் நிறைதொழில் மட்டத்தில் உள்ள போது டயர் உற்பத்தித் துறையில் மாத்திரம் ஒரு தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்படுமாயின் தேயிலை மற்றும் டயர் உற்பத்தியின் அமையச் செலவு பின்வருவனவற்றுள் எவ்வாறு மாற்றமடையும்?

| | தேயிலை உற்பத்தியின் அமையச் செலவு | டயர் உற்பத்தியின் அமையச் செலவு |
|---|---|---|
| (1) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| (2) | அதிகரிக்கும் | வீழ்ச்சியடையும் |
| (3) | மாற்றமில்லை | அதிகரிக்கும் |
| (4) | வீழ்ச்சியடையும் | அதிகரிக்கும் |
| (5) | வீழ்ச்சியடையும் | வீழ்ச்சியடையும் |

**4.** சந்தைப் பொருளாதார முறைமையுடன் ஒப்பிடும்போது மத்திய திட்டமிடல் பொருளாதார முறைமை ஒன்றில் புத்தாக்கத்திற்கான முனைப்பு பலவீனமாக காணப்படுவது ஏன்?
(1) நிறுவனங்களுக்கிடையே நிலவும் மிகையான போட்டித்தன்மை ஊடாக போலிகள் உருவாவது ஊக்குவிக்கப்படுகிறது.
(2) புலமைச் சொத்துரிமை மிகவும் வலுவானதாகக் காணப்படுதல்.
(3) இலாப நோக்கங்கள் போதாமல் உள்ளமை.
(4) நுகர்வோர் விருப்பத் தெரிவில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்கள்.
(5) முதலீட்டுத் தீர்மானங்கள் முழுமையாக பன்முகப்படுத்தப்பட்டுள்ளமை.

03030000320112862

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



5. ஏனையவை மாறாத நிலையில் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடையும் போது நுகர்வோர் ஒரு பொருளுக்கான கொள்வனவுத் தொகையை பொதுவாக அதிகரிப்பதற்கான ஒரு காரணம்
   (1) வருமானம் அதிகரிக்கும் போது ஒரு மேலதிக அலகிற்கு விலை செலுத்துவதற்கான விருப்பம் அதிகரிக்கின்றது.
   (2) நுகர்வோர்களின் கொள்வனவுச் சக்தி அதிகரிக்கின்றது.
   (3) நுகர்வோர்கள் பதிலீட்டுப் பொருட்களுக்கான அவர்களின் கொள்வனவை அதிகரிக்கின்றனர்.
   (4) நுகர்வோர்கள் நிரப்புப் பொருட்களுக்கான அவர்களின் கொள்வனவை அதிகரிக்கின்றனர்.
   (5) எதிர்காலத்தில் விலைகள் வீழ்ச்சியடையும் என நுகர்வோர்கள் எதிர்பார்க்கின்றனர்.

6. இவ் அட்டவணையானது சந்தை சமநிலையில் இருக்கும் போது ஒரு பொருளின் விலையையும் விசேட காலப்பகுதியில் பொருட்களுக்கான மொத்தச் செலவையும் காட்டுகின்றது.

| காலப்பகுதி | விலை (ரூபா) | மொத்தச் செலவு (ரூபா) |
|---|---|---|
| 1 | 15 | 750 |
| 2 | 8 | 400 |
| 3 | 5 | 250 |
| 4 | 10 | 500 |
| 5 | 6 | 300 |

   பின்வரும் தரவுகளிலிருந்து எந்த முடிவிற்கு வரலாம்?
   (1) இப்பொருள் ஒரு இழிவுப் பொருளாகும்.
   (2) இப்பொருளானது உற்பத்தியில் நிலையான அமையச் செலவினைக் கொண்டுள்ளது.
   (3) கேள்வி விலை நெகிழ்ச்சியானது ஒன்றுக்கு சமமாக உள்ளது.
   (4) நிரம்பல் விலை நெகிழ்ச்சியானது பூச்சியத்திற்கு சமமாக உள்ளது.
   (5) இப்பொருள் ஒரு ஆடம்பரப் பொருளாகும்.

7. ஒரு குறிப்பிட்ட வருடத்தில் ஒரு பொருளின் 5 000 அலகுகள் ஒரு அலகு ரூபா 100 இற்கு விற்கப்படுகின்றன. அதற்குப் பின்னைய வருடத்தில் 8 000 அலகுகள் ஒரு அலகு ரூபா 125 இற்கு விற்கப்படுகின்றன. நுகர்வோர் சுவை மாற்றமடையாமல் உள்ளது எனின் இரண்டு வருடங்களுக்கும் இடையேயான மாற்றத்தினை பின்வருவனவற்றில் எது விளக்கிக் காட்டும்?
   (1) உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் விலைகளில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
   (2) உற்பத்தியில் ஏற்படும் ஒரு தொழில்நுட்ப மேம்பாடு
   (3) பொருள் உற்பத்தியில் ஒரு தனியுரிமைச் சந்தை உருவாகுதல்
   (4) ஒரு நிரப்புப் பொருளின் விலையில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு
   (5) ஒரு பதிலீட்டுப் பொருளின் விலையில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு


8. ஐந்து இணைய சேவைகளின் விலை அதிகரிப்பிற்கும் கேள்வித் தொகை வீழ்ச்சிக்கும் இடையிலான தொடர்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. எந்தச் சேவை குறைந்த கேள்வி விலை நெகிழ்ச்சியைக் கொண்டுள்ளது?

| | இணைய சேவை | விலை அதிகரிப்பு (%) | கேள்வித் தொகை வீழ்ச்சி (%) |
|---|---|---|---|
| (1) | A | 10 | 8 |
| (2) | B | 6 | 6 |
| (3) | C | 10 | 4 |
| (4) | D | 3 | 7 |
| (5) | E | 10 | 0 |

[பக். 3 ஐப் பார்க்க

0002693

9. வரைபடமானது ஒரு பிரதான நகரத்தின் உள்ளே பேருந்து பயணத்திற்கான கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளைக் காட்டுகின்றது. சூழல் மாசடைதல் மற்றும் போக்குவரத்து நெருக்கடியினைக் குறைக்கும் நோக்குடன் மாநகர சபையானது பேருந்துப் போக்குவரத்தினை பொதுமக்களுக்கு இலவசமாக வழங்குவதற்காக பேருந்துக் கம்பனிகளுக்கு கொடுப்பனவினை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.
இக்கொள்கையின் விளைவாக நுகர்வோன் மிகையானது அதிகரிப்பது




(1) PTE ஆல் (2) OPEK ஆல்
(3) QEK ஆல் (4) OTK ஆல்
(5) OMEK ஆல்

10. சந்தை நிரம்பல் மற்றும் கேள்விச் சமன்பாடுகள் ஆரம்பத்தில் கீழேயுள்ளவாறு கொடுக்கப்பட்டதாகக் கருதுக.

$Q_D = 200 - 3P$ $Q_S = -20 + 2P$


ஒவ்வொரு விலையிலும் கேள்வி 20 அலகுகளால் குறைவடைவதாகவும் ஒவ்வொரு விலையிலும் நிரம்பல் 20 அலகுகளால் அதிகரிப்பதாகவும் இருந்தால் புதிய சமநிலை விலை
(1) ரூபா 20 (2) ரூபா 30 (3) ரூபா 36 (4) ரூபா 44 (5) ரூபா 72

11. பின்வரும் கேள்வி நிரம்பல் சமன்பாடுகளால் விவரிக்கப்படும் சந்தையினை கவனத்திற்கொள்க.

$P = 140 - Q_D$ (கேள்வி) $P = 40 + Q_S$ (நிரம்பல்)

இச்சந்தையில் சமநிலையின் போது பொருளாதார மிகை
(1) 1 250 (2) 2 500 (3) 3 250 (4) 4 500 (5) 5 750

12. இவ் வரைபடத்தில் காட்டப்படும் சந்தையில் உச்ச விலை R என நிர்ணயிக்கப்பட்டால் நுகர்வோன் மிகை பிரதிபலிக்கப்படும் பகுதி
(1) PEDO ஆகும்.
(2) PSE ஆகும்.
(3) RSTJ ஆகும்.
(4) RSB ஆகும்.
(5) RJMO ஆகும்.




13. X பொருளுக்கான சந்தை சமநிலையில் 1 000 அலகுகள் ரூபா 50 விலையில் ஒவ்வொரு அலகும் விற்கப்பட்டதாகக் கருதுக. அரசாங்கம் X பொருளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களுக்கு ஒவ்வொரு அலகிற்கும் ரூபா 5 மானியம் வழங்குகின்றது. எந்தச் சூழ்நிலைகளில் மானியம் மீதான அரசாங்கத்தின் மொத்தச் செலவு ஆகக் குறைந்தளவில் இருக்கும்?

| | X பொருளுக்கான கேள்வி விலை நெகிழ்ச்சி | X பொருளுக்கான நிரம்பல் விலை நெகிழ்ச்சி |
|---|---|---|
| (1) | 1 விட குறைவு | 1 விட குறைவு |
| (2) | 1 விட குறைவு | 1 விட அதிகம் |
| (3) | 1 விட அதிகம் | 1 விட குறைவு |
| (4) | 1 விட அதிகம் | 1 விட அதிகம் |
| (5) | 1 விட அதிகம் | 1 இற்கு சமம் |

012862

0203000032011 2862

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



**14.** விவசாயப் பயிர்களுக்காக அரசாங்கம் ஏன் குறைந்தபட்ச விலையினை அறிமுகப்படுத்துகின்றது என்பதை பின்வருவனவற்றுள் எக்கூற்று சிறப்பாக விளக்குகின்றது?

(1) நுகர்வோர் செலவைக் குறைப்பதற்கு
(2) கேள்வி தளம்பல்களைக் குறைத்து நுகர்வோர் விலைகளை உறுதிப்படுத்துவதற்கு
(3) வறிய நுகர்வோர்களுக்கு நன்மை செய்வதற்கு
(4) சந்தைப் போட்டியை அதிகரிப்பதற்கு
(5) உற்பத்தியாளர்களுக்கு ஒரு உயர்வான மற்றும் உறுதியான வருமானத்தினை உத்தரவாதப்படுத்துவதற்கு

**15.** கீழேயுள்ள அட்டவணையானது ஒரு போட்டிச் சந்தையில் விற்கப்படும் வெளியீட்டின் வெவ்வேறு மட்ட மொத்த மாறும் செலவினைக் காட்டுகின்றது.

| வெளியீடு (அலகுகள்) | மொத்த மாறும் செலவு (ரூபா) |
|---|---|
| 1 | 60 |
| 2 | 90 |
| 3 | 110 |
| 4 | 125 |
| 5 | 130 |

மொத்த நிலையான செலவு ரூபா 100 எனக் கருதுக. செலவு மற்றும் வெளியீட்டு தரவுகளின் அடிப்படையில் நிறுவனமானது அதன் வெளியீட்டினை 3 இலிருந்து 4 அலகுகளாக அதிகரிக்கும் போது அதன் எல்லைச் செலவும் அது 5 அலகுகளை உற்பத்தி செய்யும்போது அதன் மொத்த சராசரி செலவும் எவ்வளவு?

| | எல்லைச் செலவு (ரூபா) | சராசரி மொத்தச் செலவு (ரூபா) |
|---|---|---|
| (1) | 15 | 26 |
| (2) | 30 | 70 |
| (3) | 20 | 80 |
| (4) | 15 | 46 |
| (5) | 60 | 56 |

**16.** ஏனையவை மாறாத போது நிறுவனத்தின் மாறும் உள்ளீட்டுக்கான விலை அதிகரிக்குமானால் பின்வருவனவற்றில் எது இடம்பெறும்?

(1) நிறுவனமானது அதன் உற்பத்தி மட்டத்தினை அதிகரிக்கும்.
(2) நிறுவனமானது அதன் உற்பத்தி மட்டத்தினை குறைக்கும்.
(3) நிறுவனத்தின் சராசரி மொத்த செலவு வீழ்ச்சியடையும்.
(4) குறுங்காலத்தில் பொருளின் விலை வீழ்ச்சியடையும்.
(5) வெளியீட்டின் ஒவ்வொரு மட்டத்திலும் நிறுவனத்தின் எல்லைச் செலவு வீழ்ச்சியடையும்.

**17.** இலாபத்தினை உச்சப்படுத்தும் ஒரு நிறைபோட்டி நிறுவனமானது குறுங்காலத்தில் பொருளியல் நட்டத்தினை அடைவதாகக் கருதுக. நிறுவனமானது தொடர்ந்தும் உற்பத்தி செய்து அதன் பொருட்களை விற்குமாக இருந்தால் பின்வருவனவற்றில் உண்மையானது எது?

(1) நிறுவனமானது அதன் உற்பத்தியின் அனைத்து நிலையான மற்றும் மாறும் செலவுகளையும் ஈடுசெய்கின்றது.
(2) நிறுவனமானது அதன் அனைத்து நிலையான செலவுகளையும் ஈடு செய்கின்றது ஆனால் அதன் அனைத்து மாறும் செலவுகளையும் ஈடுசெய்யவில்லை.
(3) நிறுவனமானது அதன் அனைத்து மாறும் செலவுகளையும் ஈடுசெய்கின்றது ஆனால் அதன் அனைத்து உற்பத்தியின் நிலையான செலவுகளையும் ஈடுசெய்யவில்லை.
(4) நிறுவனமானது அதன் அனைத்து வெளியார்ந்த செலவுகளையும் ஈடுசெய்கின்றது ஆனால் அதன் அனைத்து உள்ளார்ந்த செலவுகளையும் ஈடுசெய்யவில்லை.
(5) நிறுவனமானது அதன் நட்டத்தினைக் குறைப்பதற்கு அதன் பொருட்களின் விலையினை உயர்த்தியிருக்க வேண்டும்.

[பக். 5 ஐப் பார்க்க

**18.** இலாபத்தினை உச்சப்படுத்தும் ஒரு நிறுவனமானது குறுங்காலத்தில் அதன் மொத்த வருமானம் பின்வருவனவற்றில் எதனை விட குறைவாகக் காணப்பட்டால் மூடப்படலாம்?
(1) மொத்த செலவு
(2) மொத்த அமையச்செலவு
(3) மொத்த மாறும் செலவு
(4) மொத்த வெளியார்ந்த செலவு
(5) மொத்த உள்ளார்ந்த செலவு

012862

**19.** ஒரு நாட்டின் வருமான சுற்றோட்டத்தினை எது பெரும்பாலும் அதிகரிக்கக்கூடும்?
(1) வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையில் ஏற்படும் அதிகரிப்பு
(2) இறக்குமதியில் ஏற்படும் அதிகரிப்பு
(3) வட்டி வீதத்தில் ஏற்படும் அதிகரிப்பு
(4) வீட்டுத் துறையினரின் எல்லை சேமிப்பு நாட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு
(5) நேரில் வரிகளில் ஏற்படும் அதிகரிப்பு

**20.** பின்வருவனவற்றில் எது உற்பத்தி செய்யப்படாத நிதி அல்லாத சொத்தாகக் கருதப்படுகின்றது?
(1) இயந்திரங்கள்
(2) கணனி மென்பொருள்
(3) முடிவுப் பொருட்களின் கையிருப்புக்கள்
(4) வானொலி அலைவரிசைகள்
(5) குடியிருப்புக் கட்டிடங்கள்

**21.** அடிப்படை விலையில் மொத்தக் கூட்டிய பெறுமதி ரூபா 2 000 மில்லியனாகவும், உற்பத்தி மீதான ஏனைய வரிகள் கழித்த மானியங்கள் ரூபா 100 மில்லியனாகவும், உற்பத்திப் பொருட்கள் மீதான வரிகள் ரூபா 450 மில்லியனாகவும் அத்துடன் உற்பத்திப் பொருட்கள் மீதான மானியங்கள் ரூபா 50 மில்லியனாகவும் இருந்தால், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதி
(1) ரூபா 1 600 மில்லியன்.
(2) ரூபா 1 900 மில்லியன்.
(3) ரூபா 2 400 மில்லியன்.
(4) ரூபா 2 500 மில்லியன்.
(5) ரூபா 2 600 மில்லியன்.

**22.** ஒரு கருதுகோள் ரீதியான பொருளாதாரத்திற்கான சில தெரிவு செய்யப்பட்ட பேரினப் பொருளாதார தரவுகளை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| வருடம் | பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி (ரூபா பில்லியன்) | பொது விலை மட்ட சுட்டெண் |
|---|---|---|
| வருடம் 1 | 200 | 100 |
| வருடம் 2 | 300 | 125 |
| வருடம் 3 | 450 | 150 |

வருடம் 3 இல் இப் பொருளாதாரத்தின் மெய் பொருளாதார வளர்ச்சி வீதம் யாது?
(1) 5% (2) 10% (3) 15% (4) 20% (5) 25%

**23.** பின்வருவனவற்றில் எது பெரும்பாலும் தேசிய வருமானப் பெருக்கியின் பருமனைக் குறைக்கும்?
(1) எல்லை நுகர்வு நாட்டத்தில் ஏற்படும் அதிகரிப்பு
(2) வரி வீதத்தில் ஏற்படும் குறைப்பு
(3) எல்லை சேமிப்பு நாட்டத்தில் ஏற்படும் அதிகரிப்பு
(4) தன்னிச்சையான நுகர்வில் ஏற்படும் அதிகரிப்பு
(5) முதலீட்டில் ஏற்படும் அதிகரிப்பு

**24.** கெயின்சிய குறுக்கு (Keynesian Cross) வரைபடத்தில் $45^0$ கோடு பிரதிபலிப்பது
(1) அனைத்து புள்ளிகளிலும் சேமிப்பு முதலீட்டுக்குச் சமனாகக் காணப்படும்
(2) அனைத்து புள்ளிகளிலும் மொத்த வருமானம் மொத்த செலவுக்கு சமனாகக் காணப்படும்
(3) அனைத்தும் வருமானத்தின் நிறை தொழில் மட்டங்கள்
(4) மொத்தக் கேள்விக்கும் விலை மட்டத்திற்கும் இடையிலான தொடர்பு
(5) அனைத்துப் புள்ளிகளிலும் நுகர்வு செலவிடத்தக்க வருமானத்திற்கு சமமாகக் காணப்படும்.

01030000320112862

**25.** ஒரு மூடப்பட்ட பொருளாதார மாதிரியில் நுகர்வு (C) வரிகள் (T) முதலீடு (I) அரசாங்க கொள்வனவுகள் (G) என கீழே தரப்பட்டுள்ளன.

C = 200 + 0.75 Yd, (Yd செலவிடத்தக்க வருமானம்.), T = 400, I = 500, G = 600

சமநிலையில் தேசிய வருமான மட்டம் (Y), நுகர்வு (C) மற்றும் சேமிப்புக்கள் (S) என்பவற்றைக் கணிப்பிடுக.

| | Y | C | S |
|---|---|---|---|
| (1) | 3 600 | 1 200 | 600 |
| (2) | 4 000 | 2 900 | 700 |
| (3) | 4 000 | 2 700 | 1 100 |
| (4) | 3 200 | 2 000 | 600 |
| (5) | 6 400 | 4 700 | 1 700 |

**26.** கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணால் அளவிடப்படும் மிகவுயர்ந்த பணவீக்கத்தை இலங்கை பதிவு செய்த ஆண்டு எது?

(1) 2021 (2) 2022 (3) 2023 (4) 2024 (5) 2025

**27.** பின்வருவனவற்றுள் எச்சந்தர்ப்பத்தில் முதன்மைப் பணவீக்கமானது மையப் பணவீக்கத்தைவிட பெரும்பாலும் அதிகரித்துச் செல்லும்?

(1) உணவுப் பொருட்கள் மற்றும் எரிபொருட்களின் விலைகள் நிலையாகக் காணப்படல்.
(2) இறக்குமதிகளின் விலைகள் குறைவடைதல்.
(3) சர்வதேச எண்ணெய் விலைகளில் தற்காலிகமான ஓர் அதிகரிப்பு
(4) மொத்தக் கேள்வியை குறைக்கவல்ல ஒரு இறுக்கமான பணக்கொள்கை
(5) நேரில் வரிகளில் ஏற்படும் ஓர் வீழ்ச்சி

**28.** மத்திய வங்கியானது திறந்த சந்தையில் ரூபா 200 மில்லியன் பெறுமதியான பிணையங்களைக் கொள்வனவு செய்வதாகக் கருதுக. தேவைப்படும் ஒதுக்கு 10% ஆகும். அதேவேளை வங்கிகளில் மிகை ஒதுக்கு காணப்படவில்லை எனவும் பண ஒதுக்குகள் இல்லை எனவும் எடுகோள் கொள்க. வங்கி முறைமையானது எல்லாச் சீராக்கங்களையும் செய்த பின்னர், ஒதுக்குகள், கேள்வி வைப்புகள் மற்றும் கடனின் அளவு பின்வரும் எந்த அளவினால் அதிகரிக்கும்?

| | ஒதுக்குகள் (ரூபா மில்லியன்) | கேள்வி வைப்புகள் (ரூபா மில்லியன்) | கடன் (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| (1) | 200 | 2 000 | 2 000 |
| (2) | 2 000 | 1 800 | 2 000 |
| (3) | 1 800 | 2 000 | 1 800 |
| (4) | 200 | 1 800 | 2 000 |
| (5) | 200 | 2 000 | 1 800 |

**29.** இல்லத்தரசி ஒருவர் அவசரத் தேவைகளின் பொருட்டு பயன்படுத்தும் நோக்கில் ரூபா 10 000 வீட்டில் வைத்திருந்தார். அவர் தனது பணத்தை வணிக வங்கியொன்றின் நடைமுறைக் கணக்கில் வைப்பிலிட்டார். இவ்வைப்பு எவ்வாறு பணக்கூட்டுகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும்?

(1) $M_1$ குறைவடையும் அதேவேளை $M_2$ அதிகரிக்கும்.
(2) $M_1$ மாறாதிருக்கும் அதேவேளை $M_2$ அதிகரிக்கும்.
(3) $M_1$ அதிகரிக்கும் அதேவேளை $M_2$ மாறாதிருக்கும்.
(4) $M_1$ மற்றும் $M_2$ அதிகரிக்கும்.
(5) $M_1$ மற்றும் $M_2$ மாறாதிருக்கும்.

[பக். 7 ஐப் பார்க்க

**30.** இலங்கையின் புதிய மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியின் சுயாதீனத் தன்மையை வலுப்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்த பிரதான காரணத்தை பின்வரும் எக்கூற்று சிறப்பாக விளக்குகிறது?
(1) அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டகுறை நிலையை கட்டுப்பாடற்ற விதத்தில் நிதியீட்டம் செய்வதற்கு மத்திய வங்கிக்கு இடமளித்தல்.
(2) பணக் கொள்வனவுத் தீர்மானம் மேற்கொள்வதில் அரசியல் அழுத்தங்களைக் குறைத்து கொள்கை நம்பகத்தன்மையை அதிகரித்தல்.
(3) பணக்கொள்கையை நடைமுறைப்படுத்தும் செயலை நிதிமுறைமையில் உள்ள வணிக வங்கிகளுக்கு முற்றாக ஒப்படைத்தல்.
(4) பணவீக்க அழுத்தங்கள் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் வட்டி வீதத்தை குறைந்த மட்டத்தில் பேணுவதை உறுதி செய்தல்.
(5) மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் வணிக வங்கிச் செயற்பாடுகள் அனைத்தையும் நீக்குதல்.

**31.** எதிர்க்கணிய வெளிவாரிகள் நிலவும் சந்தர்ப்பங்களில் சந்தைத் தோல்வி ஏற்படுவது ஏன் என்பதை பின்வருவனவற்றுள் எக்காரணி மிகத் தெளிவாக விளக்குகிறது?
(1) எல்லைச் சமூக நன்மை எல்லை தனியார் நன்மையை விட உயர்வாக இருத்தல்.
(2) எல்லை தனியார் செலவு எல்லை சமூக செலவை விட உயர்வாக இருத்தல்.
(3) எல்லை சமூக செலவு எல்லை தனியார் செலவை விட உயர்வாக இருத்தல்.
(4) நுகர்வோருக்கு பகுத்தறிவான எதிர்பார்க்கைகள் குறைவாக இருத்தல்.
(5) அரசாங்கம் அதிகளவில் வரிவிதித்தல்.

**32.** விருத்திமுறை வரிமுறைமை ஒன்றில்
(1) வருமானம் அதிகரிக்கும் போது வரிச் சதவீதம் குறைவடையும்.
(2) எல்லோரும் சம அளவினால் வரி செலுத்துவர்.
(3) வருமானம் அதிகரிக்கும் போது வரிச் சதவீதம் அதிகரிக்கும்.
(4) நேரில் வரிகள் நேர் வரிகளை விட அதிக பங்கினை வகிக்கும்.
(5) அரசாங்கத்தின் செலவுகள் அதன் வருமானத்தை விட அதிகரிக்கும்.

**33.** வள ஒருக்கீட்டு வினைத்திறனின்மை ஏற்படுவதை குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் வரித் தத்துவம் யாது?
(1) நடுநிலைத்தன்மை
(2) நிச்சயத்தன்மை
(3) நியாயத்தன்மை
(4) எளிமைத்தன்மை
(5) விளைதிறன் தன்மை

**34.** பொதுப் பொருட்களுக்கும் பொது வளங்களுக்கும் இடையிலான வேறுபாட்டை சரியாகக் கூறும் கூற்று யாது?
(1) பொதுப் பொருட்கள் போட்டித்தன்மை வாய்ந்த அதேவேளை பொது வளங்கள் போட்டித்தன்மை அற்றவையாகும்.
(2) பொதுப் பொருட்கள் விலக்குதல் விதிக்கு உட்படாதவையாகவும் போட்டித்தன்மையற்றதாகவும் இருக்கும் அதேவேளை பொது வளங்கள் விலக்குதல் விதிக்கு உட்படாதவையாயினும் போட்டித்தன்மை வாய்ந்தனவாகும்.
(3) பொது வளங்கள் விலக்குதல் விதிக்கு உட்பட்டதாக இருக்கும் அதேவேளை பொதுப் பொருட்கள் போட்டித்தன்மை வாய்ந்தவையாகும்.
(4) பொதுப் பொருட்கள் எப்போதும் எதிர்கணிய வெளிவாரிகளை உருவாக்கும் என்பதுடன் பொது வளங்கள் எப்போதும் நேர்க்கணிய வெளிவாரிகளை உருவாக்கும்.
(5) பொது வளங்கள் எப்போதும் தனியாரின் உரிமையின் கீழ் காணப்படும் என்பதுடன் பொதுப் பொருட்கள் எப்பொழுதும் அரசாங்கத்தால் வழங்கப்படும்.

**35.** சமநிலை வரவு செலவுத்திட்டப் பெருக்கி குறிப்பிடுவது
(1) வரிகளிலும் அரசாங்க கொள்வனவுகளிலும் ஏற்படும் சம அதிகரிப்பு தேசிய வருமானத்தை அதிகரிக்கக் கூடும்.
(2) வரிக்குறைப்பு எப்போதும் பணவீக்கத்தை வீழ்ச்சியடையச் செய்யும் என்பதாகும்.
(3) வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை தன்னிச்சையாகவே வேலையின்மையைக் குறைப்பதுடன் பொருளாதார வளர்ச்சியையும் அதிகரிக்கும்.
(4) அரசாங்க செலவீடுகளில் பெருக்கி விளைவு இல்லை என்பதாகும்.
(5) வரிகளிலும் அரசாங்கச் செலவீட்டிலும் ஏற்படும் சம அதிகரிப்பு நிச்சயமாக வறுமையைக் குறைக்கும்.

[பக். 8 ஐப் பார்க்க

**36.** முழு நன்மை மற்றும் ஒப்பீட்டு நன்மை ஆகியவற்றிற்கு இடையிலான முக்கிய வேறுபாடு யாதெனில் ஒப்பீட்டு நன்மையின் அடிப்படையாக அமைவது
(1) ஊழிய உற்பத்தி திறனாகும். (2) வளங்களின் உரிமையாகும்.
(3) அமையச் செலவு வேறுபாடாகும். (4) சனத்தொகையின் அளவாகும்.
(5) ஏற்றுமதிகளின் அளவாகும்.

**37.** இறக்குமதி முடிவுப் பொருள் மீது 20% தீர்வை விதிக்கப்பட்டுள்ளதுடன் இறக்குமதி மூலப்பொருட்கள் மீது 5% தீர்வை விதிக்கப்பட்டுள்ளதாகவும் கொள்க. இது பெரும்பாலும்
(1) உள்ளூர் உற்பத்தியாளருக்கான பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பை குறைக்கும்.
(2) உள்நாட்டுக் கைத்தொழிலுக்கான பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பை அதிகரிக்கும்.
(3) உள்நாட்டு பெறுமதிச் சேர்க்கையை முழுமையாக அகற்றிவிடும்.
(4) உள்நாட்டு உற்பத்திக்கான ஊக்குவிப்பை குறைக்கும்.
(5) வெளிநாட்டு நேரடி முதலீட்டு உள்வருகையை ஊக்குவிக்காது.

**38.** பின்வருவனவற்றுள் உலக வர்த்தக அமைப்பின் தொழிற்பாடாக **அமையாதது** எது?
(1) பல்தரப்பு வர்த்தக ஒப்பந்தங்களை நிர்வகித்தல்.
(2) வர்த்தக பேச்சுவார்த்தைகளுக்கான தளத்தினை வழங்குதல்.
(3) அங்கத்துவ நாடுகளிடையே ஏற்படும் வர்த்தகப் பிணக்குகளைத் தீர்த்து வைத்தல்.
(4) அங்கத்துவ நாடுகளுக்கு நீண்டகாலக் கடன்களை வழங்கல்.
(5) அங்கத்துவ நாடுகளின் வர்த்தக கொள்கைகளை கண்காணித்தல்.

**39.** சென்மதி நிலுவையில் உள்ள இரண்டாந்தர வருமானக் கணக்கு, முதலாந்தர வருமானக் கணக்கிலிருந்து வேறுபடுவது
(1) காரணி வருமானங்களை மட்டும் பதிவு செய்வதனாலாகும்.
(2) பண அனுப்பல்கள் மற்றும் வெளிநாட்டு உதவிகள் உள்ளடங்கலாக எல்லா மாற்றங்களையும் அதில் உள்ளடக்காமையினாலாகும்.
(3) பண அனுப்பல்கள் போன்ற ஒருபக்க மாற்றல்களை அதில் உள்ளடக்குவதனாலாகும்.
(4) அரச பிணையங்களில் இருந்து கிடைக்கும் வருமானங்களை மட்டும் அதில் உள்ளடக்குவதனாலாகும்.
(5) வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிச் செலுத்தல்களை மட்டும் அதில் பதிவு செய்வதனாலாகும்.

**40.** பின்வருவனவற்றுள் தாராள மிதக்கவிடப்பட்ட நாணயமாற்று வீத முறைமையில் சந்தைச் சக்திகள் ஒரு நாட்டின் வர்த்தக நிலுவையில் ஒரு மிகை நிலையை அல்லது குறைநிலையை தன்னிச்சையாக குறைக்க முடிவது ஏன் என்பதை விளக்க உதவுவது எது?
(1) ஒரு குறைநிலையானது நாட்டின் நாணயத்திற்கான மிகைக் கேள்விக்கும் நாணயமாற்றுவீத பெறுமதித் தேய்வுக்கும் இட்டுச் செல்லும்.
(2) ஒரு குறைநிலையானது நாட்டின் நாணயத்திற்கான மிகை நிரம்பலுக்கும் நாணயமாற்றுவீத பெறுமதி உயர்வுக்கும் இட்டுச் செல்லும்.
(3) ஒரு மிகை நிலையானது நாட்டின் நாணயத்தின் மிகைக் கேள்விக்கும் நாணயமாற்றுவீத பெறுமதித் தேய்வுக்கும் இட்டுச் செல்லும்.
(4) ஒரு மிகை நிலையானது நாட்டின் நாணயத்தின் மிகை நிரம்பலுக்கும் நாணயமாற்றுவீத பெறுமதித் தேய்வுக்கும் இட்டுச் செல்லும்.
(5) ஒரு குறைநிலையானது நாட்டின் நாணயத்தின் மிகை நிரம்பலுக்கும் நாணயமாற்றுவீத பெறுமதித் தேய்வுக்கும் இட்டுச் செல்லும்.

**41.** ஒரு வெளிநாட்டு முதலீட்டாளர் இலங்கையின் பெருந்தோட்டக் கம்பனி ஒன்றின் 5% பங்குகளைக் கொள்வனவு செய்கிறார். இக்கொடுக்கல் வாங்கல்களை இலங்கையின் சென்மதி நிலுவை அட்டவணையில் பின்வருவனவற்றுள் எவ்வாறு காட்டப்படும்?
(1) நிதிக்கணக்கில் நேரடி முதலீட்டின் ஒரு செலவு மீதியாகவாகும்.
(2) நிதிக்கணக்கில் நேரடி முதலீட்டில் ஒரு வரவு மீதியாகவாகும்.
(3) நிதிக்கணக்கில் பட்டியல் முதலீட்டில் ஒரு செலவு மீதியாகவாகும்.
(4) நிதிக்கணக்கில் பட்டியல் முதலீட்டில் ஒரு வரவு மீதியாகவாகும்.
(5) மூலதனக் கணக்கில் மூலதன மாற்றலில் ஒரு வரவு மீதியாகவாகும்.

[பக். 9 ஐப் பார்க்க

**42.** ஒரு நாடு தனது சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்கு குறைநிலையில் இருந்து மிகை நிலையை நோக்கி நகர்வதற்கு மிகவும் பயனுள்ளதாக அமைவது பின்வருவனவற்றுள் எது?

(1) வெளிநாட்டு முதலீட்டாளரைக் கவரும் உயர் வட்டி வீதங்கள்.
(2) அதிகரித்த உள்நாட்டு செலவினமும் ஒரு உறுதியான நாணயமும்
(3) வெளிநாட்டிலிருந்தான அதிகரித்த தொழிலாளர் பண அனுப்பல்களும் ஒரு பலவீனமான நாணயமும்
(4) உயர் ஏற்றுமதி விலைகளும் வெளிநாட்டு கடன் மீதான அதிக வட்டிக் கொடுப்பனவுகளும்
(5) உயர்வான வியாபார முதலீடுகளும் குறைந்தளவான பட்டியலிடப்பட்ட முதலீடுகளும்

**43.** நலனை அளவிடுவதன் குறிக்காட்டியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியை (GDP) பயன்படுத்துவது தொடர்பில் பிரதான விமர்சனமாக அமைவது யாதெனில் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது

(1) சந்தைக்கு வெளியில் இடம்பெறும் பொருளாதார செயற்பாடுகளையும் சுற்றாடல் மீது ஏற்படும் செலவுகளையும் கருத்திற்கொள்வதில்லை என்பதாகும்
(2) பெயரளவு உற்பத்தியை மாத்திரம் அளவிடுவதுடன் மெய் உற்பத்தியை ஒரு போதும் அளவிடுவதில்லை என்பதாகும்.
(3) மாற்றல் செலுத்தல்களை நிகழ்கால உற்பத்தியின் ஒரு பகுதியாக உள்ளடங்குகிறது என்பதாகும்.
(4) பொருட்களின் உற்பத்தியை மட்டும் பதிவுசெய்யும் அதேவேளை சேவைகளைக் கருத்திற்கொள்வதில்லை என்பதாகும்.
(5) பொது மக்களுக்கு வழங்கும் சேவைகளுக்காக அரசாங்கம் தாங்கும் எல்லாச் செலவுகளின் உள்ளடக்கத்தையும் தவிர்ப்பதாகும்.

**44.** பொருளாதார அபிவிருத்தியின் பல்பரிமாணத் தன்மையை மிகத் தெளிவாக வெளிக்காட்டுவது பின்வரும் கூற்றுகளில் எது?

(1) பொருளாதார அபிவிருத்தி என்பது தலைக்குரிய மெய் உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்பாகும்.
(2) பொருளாதார அபிவிருத்தி என்பது வருமான அதிகரிப்பு, வாழ்க்கைத்தர அதிகரிப்பு மற்றும் சமூக முன்னேற்றம் ஏற்படுவதாகும்.
(3) பொருளாதார அபிவிருத்தி ஏற்படுவது விவசாயத் துறையின் முக்கியத்துவம் குறைவடையும் போது ஆகும்.
(4) பொருளாதார அபிவிருத்தியானது பிரதானமாக மூலதன ஆக்கத்தில் தங்கியுள்ளது.
(5) பொருளாதார அபிவிருத்தியானது வேலையின்மை, வறுமை மற்றும் பணவீக்கம் குறைவாக உள்ள போது அடையப்படும்.

**45.** ஒரு நாட்டின் வருமான கினி குணகம் 1 ஆம் ஆண்டில் 0.39 ஆக இருந்து 2 ஆம் ஆண்டில் 0.44 ஆக அதிகரிக்கிறது. கினி குணகத்தில் ஏற்படும் இவ் அதிகரிப்புக்கு பிரதானமாக அமையக் கூடியது நாட்டின் சமூக பாதுகாப்பு மற்றும் வரிக் கொள்கைகளின் எத்தகைய நிலையின் போதாகும்?

| | குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான மாற்றல்கள் | எல்லை தனிநபர் வருமான வரி வீதம் |
|---|---|---|
| (1) | குறைவடைதல் | குறைவடைதல் |
| (2) | அதிகரித்தல் | மாறாதிருத்தல் |
| (3) | அதிகரித்தல் | அதிகரித்தல் |
| (4) | மாறாதிருத்தல் | அதிகரித்தல் |
| (5) | அதிகரித்தல் | மாறாதிருத்தல் |

[பக். 10 ஐப் பார்க்க

**46.** பின்வரும் கூற்றுகளில் எது வருமான வறுமைக்கும் பல்பரிமாண வறுமைக்கும் இடையிலான வேறுபாட்டை சரியாக வேறுபடுத்திக் காட்டுகிறது?

(1) வருமான வறுமையானது உணவுச் செலவீடுகள் மீது மாத்திரம் அவதானம் செலுத்தும் அதேவேளை பல்பரிமாண வறுமை கல்வியின் மீது மாத்திரம் அவதானம் செலுத்துகிறது.
(2) வருமான வறுமையானது போதியளவு வருமானமின்மையை அளவிடும் அதேவேளை பல்பரிமாண வறுமை வாழ்க்கையின் பல்பரிமாணங்களில் காணப்படும் போதாத தன்மைகளை அளவிடுகிறது.
(3) வருமான வறுமையானது உலக வங்கியினால் மட்டும் கணிப்பிடப்படும் அதேவேளை பல்பரிமாண வறுமையானது ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தினால் மட்டும் அளவிடப்படுகிறது.
(4) வருமான வறுமையானது சுகாதாரம், கல்வி போன்றவற்றை உள்ளடக்காத அதேவேளை பல்பரிமாண வறுமை சுகாதாரம் மற்றும் வாழ்க்கைத்தரத்தை உள்ளடக்குவதில்லை.
(5) வருமான வறுமையானது நுகர்வின் மீது மட்டும் கவனம் செலுத்தும் அதேவேளை பல்பரிமாண வறுமை பணவீக்கத்திற்காக சீராக்கப்பட்ட சம்பள வீதங்கள் மீது மட்டும் கவனம் செலுத்துகிறது.

**47.** 2024 குடிசன, வீட்டு வசதிகள் தொகை மதிப்புகளின் படி இலங்கையில் தற்போதைய குடித்தொகை மாற்றங்களை மிகவும் சிறப்பாக வெளிப்படுத்தும் கூற்று பின்வருவனவற்றுள் எது?

(1) உயர்ந்த இயற்கை வளர்ச்சி, உயர் பிறப்பு வீதம் காரணமாக குடித்தொகை வளர்ச்சி ஏற்படுகிறது.
(2) உயர் பிறப்பு வீதம் காரணமாக குழந்தைகளின் குடித்தொகைச் சதவீதம் துரிதமாக அதிகரித்தல்.
(3) குறைந்த பிறப்பு வீதம், நீண்ட ஆயுள் எதிர்பார்க்கை காரணமாக முதியோர் குடித்தொகைச் சதவீதம் அதிகரித்தல்.
(4) தொழில்புரியும் குடித்தொகையினரின் துரித அதிகரிப்பு காரணமாக தங்கியிருப்போர் சதவீதம் குறைகிறது.
(5) பிறப்பு வீதம் அதிகரிப்பதனால் இடைய வயது குறைகிறது.

**48.** புதிய உத்தியோகபூர்வ தகவல்களின் படி 2025 இல் இலங்கையின் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி அமெரிக்க டொலர்களில்

(1) 4 428 ஆகும். (2) 4 546 ஆகும். (3) 4 910 ஆகும்.
(4) 5 003 ஆகும். (5) 5 010 ஆகும்.

**49.** இலங்கையின் எதிர்கால பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கைகளின் பிரதான **இடரபாயமாக** (risk) இருப்பது

(1) ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில்சார் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் போட்டித் தன்மை குறைவடைதல்.
(2) முதியோர் குடித்தொகை, அரச நிதி மீது ஏற்படுத்தும் அழுத்தம் அதிகரித்தல்.
(3) கைத்தொழில் துறையினதும் அதனோடு தொடர்புடைய சேவைகள் துறையிலும் உற்பத்தித் திறன் குறைவாகக் காணப்படல்.
(4) முழுப் பொருளாதாரத்திலும் தனியார் முதலீட்டாளரின் நம்பிக்கை தொடர்ச்சியாக நலிவடைந்து செல்லல்.
(5) புவிசார் சந்தை நிச்சயமற்றதன்மை, வெளியக அதிர்ச்சிகள் மற்றும் கட்டமைப்பு சீர்த்திருத்தங்கள் மேற்கொள்வதில் காலதாமதங்கள்.

**50.** வெளிநாட்டு அதிர்ச்சிகளுக்கு தாக்குப் பிடிப்பதில் இலங்கையின் ஆற்றலை வலுப்படுத்த மிகவும் பயனுள்ள கொள்கை நடவடிக்கைகள் யாவை?

(1) உற்பத்தி மட்டங்களை பேணிச் செல்ல இறக்குமதிகள் மீது தங்கியுள்ள கைத்தொழில்களுக்கு பரவலாக மானியங்களை வழங்குதல்.
(2) நாணயமாற்றுவீதச் சந்தையில் தொடர்ச்சியாகத் தலையீடு செய்வதன் மூலம் நிலையான நாணயமாற்று வீதத்தை பேணிச் செல்லல்.
(3) ஏற்றுமதிப் பொருட்கள் மற்றும் ஏற்றுமதிச் சந்தைகளை பன்முகப்படுத்தும் அதேவேளை அந்நியச் செலாவணி ஒதுக்குகளை அதிகரித்தல்.
(4) அபிவிருத்திக்கான நிதித் தேவைப்பாடுகளை ஈடு செய்வதற்கு குறுங்கால வெளிநாட்டுக் கடன்கள் மீது அதிகம் தங்கியிருத்தல்.
(5) சர்வதேச சந்தைகளின் தளம்பல்களுக்கு முகம் கொடுப்பதை குறைப்பதற்கு எல்லா இறக்குமதிப் பொருள்கள் மீதும் உயர் தீர்வைகளை விதித்தல்.

* * *

0002692

12865

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

ආර්ථික විද්‍යාව II
பொருளியல் II
Economics II

21 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

* உப பகுதி **'அ'** இலிருந்து ஆகக்குறைந்தது **இரண்டு** வினாக்களையும் உப பகுதி **'ஆ'** இலிருந்து ஆகக்குறைந்தது **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* வரைபுத்தாள் வழங்கப்படும்.

## உப பகுதி 'அ'

(இப்பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

**1.** (i) அருமைத் தன்மையானது இயற்கை வளங்களை எவ்வாறு பொருளாதாரப் பொருட்களாக மாற்றுகின்றது என்பதனை விளக்குக. உமது விடையை விளக்குவதற்கு காற்று அல்லது நீரை உதாரணமாகப் பயன்படுத்துக. (03 புள்ளிகள்)

(ii) டிஜிட்டல் பொருள்கள் (உ+ம்: மென்பொருள், e - புத்தகங்கள்) பொருளாதாரப் பொருட்களாகவா அல்லது அரை-இலவசப் பொருட்களாகவா வகைப்படுத்தப்பட வேண்டும்? உமது விடையினை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) உற்பத்தி செயன்முறையில் தொழில் முயற்சியாளர்களால் ஆற்றப்படும் **நான்கு** பிரதான செயற்பாடுகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) ஒரு சந்தைப் பொருளாதார முறைமையில் விலைப்பொறி முறைமையானது எவ்வாறு அருமையான வளங்களை ஒதுக்கீடு செய்கின்றது என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) இலங்கைப் பொருளாதாரமானது ஒரு கலப்புப் பொருளாதார முறைமைத் தன்மை வாய்ந்தது என்பதை வெளிப்படுத்தும் **ஐந்து** பிரதான பண்புகளை குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

**2.** (i) ஒரு நிறுவனத்தின் நிரம்பல் சார்பு $Q_S = -40 + 10P$ எனக் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கருதுக.

(அ) ஓர் அலகுக்கான விலை ரூபா 10 இருக்கும்போது நிரம்பல் தொகையினை நிர்ணயிக்குக. (01 புள்ளி)

(ஆ) நிரம்பல் தொகை நேர்க் கணியமாகுவதற்குத் தேவைப்படும் ஆகக் குறைந்த விலை யாது? (02 புள்ளிகள்)

(ii) (அ) கேள்வி விதிக்கு அடிப்படையான எடுகோள்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) கேள்வி விதி செயற்பட முடியாத சூழ்நிலைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) ஒரு பொருளின் விலை அதிகரிப்பதனால் அதன் கொள்வனவுத் தொகையினை நுகர்வோர் குறிப்பிடத்தக்க அளவில் குறைப்பார்களா என்பதனை நிர்ணயிக்கும் **மூன்று** காரணிகளைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(iv) மென்பொருள் நிரம்பலை விடவும் விவசாயப் பொருட்களின் நிரம்பல் பொதுவாக ஏன் குறைந்த நெகிழ்ச்சியுடையது என்பதனை பகுப்பாய்வு செய்க. (04 புள்ளிகள்)

(v) நுகர்வோர்களின் வருமானம் உள்ளிட்ட கேள்வியைப் பாதிக்கும் அனைத்துக் காரணிகளும் நிலையாக இருக்கும்போது ஒரு இறாத்தல் பாணின் விலை ரூபா 140 இலிருந்து ரூபா 180 ஆக அதிகரிப்பதாகக் கருதுக.

(அ) ஒரு வரைபடத்தைப் பயன்படுத்துவதன் மூலம் பாண் ஒரு கிபன் பண்டம் எனக்கருதி விலை மாற்றத்துடன் தொடர்புடைய பாதீட்டு விளைவையும் வருமான விளைவையும் விளக்குக. (03 புள்ளிகள்)

(ஆ) கிபன் வகையிலான நுகர்வு நடத்தை இடம் பெறுவதற்குத் தேவையான **மூன்று** நிபந்தனைகளைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



**3.** (i) (அ) ஒரு 'கறுப்புச் சந்தை' என்பதை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ஆ) சந்தைகளில் அரசாங்கத்தின் தலையீடுகள் எவ்வாறு கறுப்புச் சந்தைகளை உருவாக்கக்கூடும் என்பதனை **இரண்டு** உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) ஒரு நுகர்வுப் பொருளுக்காக உற்பத்தியாளருக்கு வழங்கப்படும் ஓர் அலகு மானியம் பின்வருவனவற்றின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தினை ஒரு வரைபடத்தினைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்க.

(அ) பொருளாதார மிகை

(ஆ) அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவு

(இ) மீள முடியாத இழப்பு (DWL) (02 × 3 = 06 புள்ளிகள்)

(iii) ஒரு போட்டிச் சந்தையில் விற்கப்படும் பொருளின் அலகு ஒன்றிற்கு ரூபா 50 குறைந்தபட்ச விலையினை அரசாங்கம் விதிப்பதாகக் கருதுக. கேள்வி, நிரம்பல் சார்புகள் பின்வருமாறு தரப்படுகின்றன.

$Q_D = 200 - 2P$ $\qquad Q_S = -40 + 4P$

(அ) சந்தையில் ஆகக்குறைந்த விலை விதிக்கப்பட முன்னரும் பின்னரும் நுகர்வோர் மிகையைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ஆ) சந்தையில் மிகை நிரம்பல் இல்லை எனக் கருதிக்கொண்டு ஆகக் குறைந்த விலை விதிக்கப்பட முன்னரும் பின்னரும் உற்பத்தியாளர் மிகையைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

**4.** (i) ஒரு வரைபடத்தினைப் பயன்படுத்தி குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டின் **மூன்று** பிரதான கட்டங்களைக் காட்டுக. (03 புள்ளிகள்)

(ii) (அ) அளவுத்திட்ட சிக்கனங்கள் என்பதனால் கருதப்படுவது யாது? (01 புள்ளி)

(ஆ) உள்ளக அளவுத்திட்ட சிக்கனங்களையும் வெளியக அளவுத்திட்ட சிக்கனங்களையும் வேறுபடுத்துக. (02 புள்ளிகள்)

(iii) குறுங்காலத்தில் தொழிற்படும் ஒரு நிறைபோட்டி நிறுவனமானது அதன் நிகழ்காலச் செலவு மற்றும் வருமான மட்டம் தொடர்பில் பின்வரும் தகவல்களைக் கொண்டுள்ளது.

சராசரி மாறும் செலவு (AVC) = ரூபா 90

சராசரி மொத்தச் செலவு (ATC) = ரூபா 115

ஓர் அலகுக்கான சந்தை விலை = ரூபா 100

(அ) இந்த நிறுவனம் குறுங்காலத்தில் உற்பத்தியை தொடர வேண்டுமா? உமது விடையினை விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) இந்த நிறுவனம் இலாபத்தை உழைக்கிறதா அல்லது நட்டமடைகிறதா? உமது விடையினை விளக்குக. (02 புள்ளிகள்)

(iv) ஒரு ஆடைத் தயாரிப்பு நிறுவனம் வருடாந்தம் ரூபா 16 மில்லியன் பெறுமதியான ஆடைகளை விற்பனை செய்கிறது. நிறுவனத்திற்கு பின்வரும் வருடாந்தச் செலவுகள் ஏற்பட்டுள்ளன.

| வகை | பெறுமதி (ரூபா) | வகை | பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| மூலப்பொருட்கள் | 3 500 000 | வங்கிகளுக்குச் செலுத்தப்பட்ட வட்டி | 1 000 000 |
| கூலிகள் | 3 000 000 | நிறுவனத்தில் முதலிடப்பட்ட உரிமையாளரின் மூலதனம் | 10 000 000 |
| செலுத்தப்பட்ட தொழிற்சாலை வாடகை | 120 000 | சந்தை வட்டி வீதம் | 12% |
| காப்புறுதி | 500 000 | உரிமையாளரால் விட்டுக் கொடுக்கப்பட்ட வருடாந்த சம்பளம் | 1 800 000 |
| சேவைகள் பயன்பாட்டு கட்டணங்கள் | 880 000 | | |

மேலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக:

(அ) மொத்த வெளியார்ந்த செலவுகள்

(ஆ) மொத்த உள்ளார்ந்த செலவுகள்

(இ) மொத்த பொருளாதாரச் செலவுகள்

(ஈ) கணக்கியல் இலாபம்

(உ) பொருளாதார இலாபம் (02 × 5 = 10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

Past Papers Wiki



5. (i) (அ) தேசிய கணக்குகளைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் 'உற்பத்தி வரம்பு' என்னும் எண்ணக்கருவினை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி கணக்கிடப்படும் போது ஏன் வீட்டுச் சமையல் நடவடிக்கைகள் உள்ளடக்கப்படாமல் உணவகங்களால் வழங்கப்படும் உணவுகள் உள்ளடக்கப்படுகின்றன என்பதை விளக்குக. (03 புள்ளிகள்)

(ii) ஒரு கருதுகோள் ரீதியான பொருளாதாரத்தின் தேசிய வருமானக் கணிப்பீடு தொடர்பான சில தரவுகளை கீழேயுள்ள அட்டவணை வழங்குகின்றது.

| வகை | பெறுமதி (ரூபா மில்லியன்) |
|---|---|
| அடிப்படை விலையில் வெளியீட்டின் மொத்தப் பெறுமதி (GVO) | 30 000 |
| இடைநிலை நுகர்வு | 5 000 |
| ஊழியர்களுக்கான வருமானம் | 6 000 |
| மொத்தக் கலப்பு வருமானம் | 8 500 |
| மானியங்கள் கழித்த உற்பத்தி மீதான ஏனைய வரிகள் | 500 |
| மானியங்கள் கழித்த உற்பத்தி பொருட்கள் மீதான வரிகள் | 1 000 |

(அ) இப்பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) மொத்த செயற்பாட்டு மிகையினைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) பின்வருவன ஒரு கருதுகோள் ரீதியான பொருளாதாரம் தொடர்பான சில பேரினப் பொருளாதார தரவுகளாகும்.

$C = 300 + 0.8\ Yd;$ $I = 250;$ $G = 150;$ $T = 100;$

நிறைதொழில் மட்ட வருமானம் 3500 (அனைத்துப் பெறுமதிகளும் ரூபா மில்லியனில்)

(அ) சமநிலை தேசிய வருமான மட்டத்தினைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) பொருளாதாரத்தின் பணவீக்க இடைவெளியின் அல்லது பணச்சுருக்க இடைவெளியின் அளவினை நிர்ணயிக்குக. (02 புள்ளிகள்)

(இ) நிறைதொழில் மட்டத்தினை அடைவதற்கு அரசாங்க வரிகளில் தேவைப்படும் மாற்றத்தினை மதிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) (அ) கையிருப்புகள் (inventories) என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ஆ) மொத்தச் செலவுக்கும் மொத்தக் கேள்விக்கும் இடையிலான வேறுபாட்டை சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

## உப பகுதி - 'ஆ'

(இப்பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

6. (i) ஒரு பொருளாதாரம் கடந்த நான்கு வருடங்களில் பின்வரும் வருடாந்த பணவீக்க வீதங்களைப் பதிவு செய்தது.

முதல் வருடம் = 16%   இரண்டாம் வருடம் = 10%
மூன்றாம் வருடம் = 4%   நான்காம் வருடம் = −3%

இத்தரவுகளின்படி பணவீக்கம், பணவீக்கமின்மை மற்றும் பணச்சுருக்கம் நிலவிய காலப்பகுதிகளை இனங்காண்க. (03 புள்ளிகள்)

(ii) (அ) கேள்வித் தூண்டல் பணவீக்கத்தையும் செலவுத்தூண்டல் பணவீக்கத்தையும் வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ஆ) மொத்தக் கேள்வி, மொத்த நிரம்பல் பற்றிய ஆய்வு முறையைப் பயன்படுத்தி ஒவ்வொரு பணவீக்க வகையும் எவ்வாறு ஏற்படுகின்றதென்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) வணிக வங்கியின் ஐந்தொகை ஒன்றின் வகைகள் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றன.

| வகை | பெறுமதி (மில்லியன் ரூபா) | வகை | பெறுமதி (மில்லியன் ரூபா) |
|---|---|---|---|
| காசு ஒதுக்குகள் | 100 | நிலையான சொத்துகள் | 50 |
| தவணை வைப்புகள் | 200 | சேமிப்பு வைப்புகள் | 250 |
| மூலதனம் | 500 | கடன்களும் முற்பணங்களும் | 800 |
| அரச பிணையங்கள் | 150 | கேள்வி வைப்புகள் | 600 |

PAST PAPERS WIKI

(அ) இவ்வணிக வங்கியின் ஐந்தொகையை தயார் செய்க. (02 புள்ளிகள்)

(ஆ) இவ்வணிக வங்கியின் மொத்த திரவச் சொத்துக்களின் அளவினைக் கணிப்பிடுக. (01 புள்ளி)

(இ) இவ்வணிக வங்கியின் மொத்த வைப்புகளின் அளவினைக் கணிப்பிடுக. (01 புள்ளி)

(iv) (அ) இலங்கையில் ஒதுக்குப் பணத்தின் கூறுகள் எவை? (03 புள்ளிகள்)

(ஆ) மத்திய வங்கி ஒதுக்குப் பணத்தின் அளவை எவ்வாறு சுருங்கச் செய்யக் கூடும் என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

7. (i) (அ) மேன்மைப் பொருட்களையும் தீங்கு விளைவிக்கும் பொருட்களையும் (demerit goods) வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ஆ) தாராள சந்தையில் மேன்மைப் பொருட்கள் ஏன் குறைவாக நுகரப்படுகின்றன என்பதை விளக்குக. (02 புள்ளிகள்)

(ii) இலங்கையில் அரச வரி வருமானத்தின் பிரதான மூலாதாரங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) அரசதுறை முயற்சியாண்மைகளை பேணிச்செல்வதற்கான பொருளாதார நியாயப்பாட்டினை பரிசீலனை செய்க. (03 புள்ளிகள்)

(iv) ஒரு கருதுகோள் ரீதியான பொருளாதாரத்தின் அரச நிதி தொடர்பான வருடாந்தத் தரவுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

| வகை | பெறுமதி (பில்லியன் ரூபா) |
|---|---|
| மொத்த வருமானம் | 5 400 |
| கொடைகள் | 100 |
| மொத்த நிதியீட்டத் தேவைகள் | 2 400 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 2 500 |
| மூலதனமும் தேறிய கடன்வழங்கலும் | 1 200 |
| கடன் தவணைப்பண கொடுப்பனவுகள் | 1 600 |

மேலுள்ள தரவுகளைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(அ) மொத்த வரவு செலவுத்திட்ட நிலுவை (ஆ) மொத்த மீண்டெழும் செலவீடு

(இ) முதன்மைச் செலவீடு (ஈ) முதன்மை நிலுவை

(உ) மீண்டெழும் கணக்கு நிலுவை ($02 \times 5 = 10$ புள்ளிகள்)

8. (i) (அ) நிலையியல் ஒப்பீட்டு நன்மையையும் இயங்கியல் ஒப்பீட்டு நன்மையையும் வேறுபடுத்துக. (02 புள்ளிகள்)

(ஆ) ஒரு நாட்டில் ஒரு அரசாங்கம் இயங்கியல் ஒப்பீட்டு நன்மையை உருவாக்கக்கூடிய **நான்கு** வழிகளைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) (அ) அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பாதுகாப்புவாதக் கொள்கைகளை கடைப்பிடிப்பதற்கான **மூன்று** காரணங்களை விளக்குக. (03 புள்ளிகள்)

(ஆ) பெயரளவுப் பாதுகாப்புக்கும் வினைத்திறன் வாய்ந்த பாதுகாப்புக்கும் இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) இலங்கையின் ஏற்றுமதி ஒருமுகப்படுத்தலும் இறக்குமதியில் தங்கியிருத்தலும் எவ்வாறு உலகளாவிய அதிர்ச்சிகளுக்கு அதன் எளிதில் பாதிக்கப்படக்கூடிய நிலைமையை அதிகரிக்கின்றன என்பதனை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) (அ) 2026 இன் முதலாம் அரையாண்டுக் காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி தேய்வடைந்தமைக்குப் பங்களிப்புச் செய்த முக்கிய **மூன்று** காரணிகளைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ஆ) இக்காலப்பகுதியில் நாணயமாற்று வீதம் மீதான அழுத்தத்தினைக் குறைப்பதற்கு மத்திய வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட **இரண்டு** நடவடிக்கைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

9. (i) பொருளாதார அபிவிருத்தியை வரைவிலக்கணப்படுத்துக. (03 புள்ளிகள்)

(ii) தேசிய வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பின் ஊடாக மட்டும் ஏன் அபிவிருத்தியை அளவிடமுடியாது என்பது பற்றி விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) இலங்கையில் கிராமிய மற்றும் பெருந்தோட்டத் துறைகளில் பல்பரிமாண வறுமை நிலை உயர்ந்த மட்டத்தில் இருப்பது ஏன் என்பதைப் பரிசீலிக்குக. (04 புள்ளிகள்)

(iv) தற்போது இலங்கை ஒரு 'நடுத்தர வருமானப் பொறியினை' அனுபவிக்கின்றதா இல்லையா என்பது பற்றி விளக்குக. (04 புள்ளிகள்)

(v) இலங்கையின் குறைந்தளவான பிறப்புவீதமானது, ஊழிய நிரம்பல் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றில் ஏற்படுத்தும் நீண்டகால விளைவுகளைப் பகுப்பாய்வு செய்க. (05 புள்ளிகள்)

10. (i) "மேல் மாகாணம் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமமற்ற வகையில் மிகப்பெரிய பங்களிப்பை வழங்கும் அதேவேளை ஏனைய மாகாணங்களின் பங்களிப்பு சார்பளவில் குறைவானதாகும்." பொருளாதார நடவடிக்கைகள் மேல் மாகாணத்தினுள் செறிவடைந்துள்ளமைக்கான **ஐந்து** காரணிகளைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(ii) இலங்கை போன்ற ஒரு அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரத்தின் மீது காலநிலையுடன் தொடர்புடைய அனர்த்தங்கள் மூலம் ஏற்படும் பொருளாதார விளைவுகள் யாவை? (05 புள்ளிகள்)

(iii) இலங்கையின் நீண்டகால அபிவிருத்தி மூலோபாயத்தின் ஒரு பகுதியாக விவசாயத்துறையை வலுப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) டிஜிட்டல் மயமாக்கம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு எவ்வாறு துணைபுரிய முடியும் என்பதை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
www.PastPapers.WiKi
0000872
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library